1990 ஏப்ரல் 2]

அதுகுறித்து இரண்டு துறைகளோடும் பேசியிருக்கிறோம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான கருத்துக்களை அரசு பரிசீலித்து வருகிறது.

9.45 மணி

திரு. தி. ரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நிலவிவரும் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கின்ற வகையில் சிமெண்ட் தொட்டிகள் கட்டப்படும் என்று சொல்கிறார்கள். அவற்றைக் கட்டிமுடிப்பதற்கு நீண்ட காலமாகிறது. ஆகவே அவசர நிமித்தம் குறித்து 'சின்டெக்ஸ் டாங்குகளை' அங்கே அமைத்துத் தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலேகூட கடந்த ஆண்டுகளிலே இந்த 'சின்டெக்ஸ் டாங்குகள்' பொருத்தப் பட்டு, பல இடங்களில் இருக்கின்றன. ஆனால் 'சின்டெக்ஸ் டாங்குகள்' நீண்ட காலம் உதவுவதாக இல்லை. அதனால்தான் 'சின்டெக்ஸ் டாங்குகள்' பொருத்துவதற்குப் பதிலாக நீண்ட காலமாக இருக்கக்கூடிய நிரந்தரமாக இருக்கக்கூடிய சிமெண்ட் தொட்டிகளையே கட்டலாம் என்று அரசு முடிவெடுத்து அவற்றைச் செய்துவருகிறது.

திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கிராமங்களில் சிமெண்ட்டால் ஆன குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்படுவதாகச் சொல்கிறார்கள். அது நல்ல அம்சம்தான். ஆனால் மின்சாரக் கோளாறினாலும், அந்த மோட்டார்கள் பழுதடைவதன் காரண மாகவும் மாதக் கணக்கில் மக்கள் குடிநீருக்காகப் பெரும் அவதிப்படுகிறார்கள். ஆகவே இதைக் கருத்திற்கொண்டு ஆங்காங்கே ஆழ் குழாய்க் கிணறுகளை சமீபத்திலேயே போடு வதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆழ் துளைக்கிணறுகள் அந்தந்த கிராமங்களில் நீர் ஆதாரம் இருக்குமானால் அங்கேயே போடப்படுகின்றன. நீர் ஆதாரம் இல்லாத இடங்களில்தான் வேறு இடங்களிலேயிருந்து குடிநீர் கொண்டுவருகின்ற அவசியம் ஏற்படுகிறது. அதைப் பொறுத்து திட்டங்கள் தீட்டப்படு கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காங்கேயம் அரசு மருத்துவமனையில் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்.

*6312 திரு. பி. மாரப்பன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

காங்கேயம் அரசு மருத்துவமனையின் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிமிகு தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. மு. க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்குப் படுக்கைகள் இல்லாமல் தரையிலேயே படுக்கவைக்கின்ற கொடுமை நடைபெறுகின்றன. இது அரசுக்குத் தெரியுமா? இதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; மாண்புமிகு தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற மக்கட்தொகையின் காரணமாக மருத்துவமனைகளிலே இட நெருக்கடி அவ்வப்போது ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அரசினுடைய நிதிநிலைப் பெருக்கத்திற்கு ஏற்ப ஆண்டுக்கு ஆண்டு முக்கியமான மருத்துவமனைகளிலே படுக்கையினுடைய எண்ணிக்கை உயர்த்தப்பட்டு வருகின்றது. அந்த அடிப்படையில் குறிப்பிட்ட மருத்துவமனைகளில் இட நெருக்கடி இருந்து, அங்கே மேலும் மருத்துவமனை வேண்டுமென்று விண்ணப்பங்கள் வரும்பொழுது அவற்றை அரசினுடைய நிதி நிலைமைக்கேற்ப பரிசீலித்து அதிகரிக்கின்ற நிலைமையை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. தயாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய மருத்துவமனைகளில் படுக்கையினுடைய எண்ணிக்கையை எதன் அடிப்படையில் உயர்த்தியிருக்கிறார்கள்? மக்கள் வைக்கின்ற கோரிக்கையின் அடிப்படையிலா? அல்லது வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலா என்பதை அறிய விரும்புவதோடு, என்னுடைய தொகுதியான ஆரணியிலே சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட அந்த மருத்துவமனையிலே . . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுகளில் அந்த மருத்துவமனைக்கு வருகின்ற வெளி நோயாளிகள், உள் நோயாளிகள் ஆகியோரின் எண்ணிக்கையை எல்லாம் பரிசீலனையில் எடுத்துக்கொண்டு, அந்த மக்களுடைய கோரிக்கைகளையும் பரிசீலனையில் எடுத்துக்கொண்டுதான் இதுபோன்ற படுக்கையினுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படுக்கைகளைக் கவனிப்பதற்கு செவிலியர்கள்

இருக்கிறார்கள். ஆனால் ஒரு செவிலியர் 5 வியாதியஸ்தர்களைத்தான் கவனிக்க முடியும் என்ற நிலை இருக்க: சென்னையிலே இருக்கக்கூடிய பொது மருத்துவமனையில் சுமார் 2,000 படுக்கைகள் இருக்கும்பொழுது நானூற்றுச் சொச்சம் செவிலியர்கள் தான் இருக்கிறார்கள். அந்த வியாதியஸ்தர்களை கவனிக்கக் கூடிய அளவிற்குச் செவிலியர்கள் அதிகப்படுத்தக் கூடிய திட்டம் அரசிடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்களும் இதுகுறித்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார்கள். இதுகுறித்து முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையில் அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு பரிசிலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை தலைமை மருத்துவமனையிலே சுண்ணாம்பு அடிக்கப்படாமல், கதவுகள் எல்லாம் பெயிண்ட் அடிக்கப்படாமல் இப்படி பல சங்கடங்கள் இருக்கின்றன....(மணியடிக்கப்பெற்றது)

இரயுமன் துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்.

*3363 திரு. மா. சுந்தரதாஸ்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், இரயுமன் துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிய சுவை உடைய பல்வேறு வகையான மீன்கள் கிடைக்கின்றன. தமிழகத்தில் எங்கும் கிடைக்காத அளவிற்கு அற்புதமான சுவை உடைய மீன்கள் அங்கே கிடைத்து வருகின்ற காரணத்தால் என்னுடைய வேண்டுகோள், தமிழக முதல்வர் அவர்களும் ஏனைய அமைச்சர்களும் அங்கே வருகை தருகின்றபோது அத்தகைய மீன்களுடைய சுவைகளை அவர்கள் நேரடியாக அனுபவிப்பார்களேயானால், மேலும் மீன்களைப் பிடிக்கின்ற வகையில் இரயுமன் துறையில் மேலும் ஒரு மீன்பிடித் துறைமுகத்தை அமைப்

TRUTH ALONE TRIUMPHS